FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

Under Section 173 BNSS C

8109724

1. District : அரியலூர் PS: Vகிபக அரியலூர் Year: 2025 FIR No. 04/25 Date: 26.06.25
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: உயிருள் தடுப்பு சட்டம் 1988 Sections பிரிவுகள்: 4(1) of pc Act 1988
(ii) Act சட்டம்: (as amended in 2018) Sections பிரிவுகள்: (as amended in 2018)
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் 25.06.25 நாள் வரை 14.00 hrs
Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் 26.06.25 நேரம் வரை 07.00 hrs
(b) Information Received at PS. Date : 26.06.25 Time : 07.00 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக தொலைபேசி மூலம் தகவல்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் உதயநிதி மின் பொறியாளர் அலுவலகம் ஆதனூர், அரியலூர் மாவட்டம்
Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : (b) Father's/ Husband's Name :
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் [illegible] தந்தை / கணவர் பெயர் [illegible]
(c) Date / Year of Birth : (d) Nationality : (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : (g) Address :
தொழில் முகவரி தாசனூர் ஊராட்சி மன்ற துணைத் தலைவர், அரியலூர் மாவட்டம், அரியலூர் மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
அரியலூர் கோட்ட செயற்பொறியாளர் அலுவலகம், உதயநிதி மின் பொறியாளர் அலுவலகம், ஆதனூர், அரியலூர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
தொலைபேசி

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு என் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல் குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

26.6.25

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

26.06.25

Name: பெயர்
Rank: நிலை No.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

26.06.25
11.00 AM

26.06.25

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது

அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 04/2025 முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12-க்கான இணைப்பு:-

25.06.2025-ம்தேதி 18.00 மணிக்கு அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் அலுவலகத்தில் இருந்தபோது அரியலூர் மாவட்டம், அரியலூர் வட்டம், செட்டித்திருக்கோணம், காலணி தெரு, எண்.373 என்ற முகவரியில் வசிக்கும் முருகன் மகன் மு.வீரமுத்து என்பவர் என்முன் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனுவினை பெற்று, அதுகுறித்து சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, இயக்குநரகத்திற்கு தெரிவித்து, அந்த புகார் மனுவில் கூறப்பட்டுள்ள தேளூர் உதவி மின் பொறியாளர் அலுவலக Commercial Assistant திரு.சாமிநாதன் என்பவரின் முன் நடத்தைகள் பற்றி விசாரணை மேற்கொள்ளப்பட்டு, இன்று 26.06.2025 ஆம் தேதி காலை 07.00 மணிக்கு அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 05/2025, சட்டப்பிரிவு 7 ஊழல் தடுப்பு சட்டம் 1988 (திருத்தம் 2018)-ன்படி வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள விபரம் பின்வருமாறு:- அனுப்புநர்: மு.வீரமுத்து, வயது 35, த/பெ. முருகன், எண். 373, காலணி தெரு, செட்டித்திருக்கோணம், அரியலூர் வட்டம், அரியலூர் மாவட்டம். செல் நம்பர் - 6380579870 பெறுநர்: உயர்திரு காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, அரியலூர். அம்மா, நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கட்டிட கூலி வேலை செய்து வருகிறேன். எங்கள் ஊரைச் சேர்ந்த தனசாமி என்பவரது மகள் பத்மாவதி என்பவரை நான் திருமணம் செய்துள்ளேன். எனது மாமனார் தனசாமி சென்னையில் தங்கி வேலை பார்த்து வருகிறார். எனது மாமியார் குணவதி எங்கள் தெருவிலேயே தனியாக வசித்து வருகிறார். அவருக்கு வயது சுமார் 62 இருக்கும். எனது மாமியார் தற்போது செட்டித்திருக்கோணம் காலணி தெருவில் உள்ள அவருக்கு சொந்தமான இடத்தில் சிறியதாக வீடு ஒன்று கட்டி வருகிறார். தற்போது வீடு அஸ்த்திவாரம் போடப்பட்ட நிலையில் உள்ளது. வீடு கட்டும் பணியினை தொடர்ந்து செய்ய புதிய மின் இணைப்பு தேவைப்பட்டதால் சுமார் 20 நாட்களுக்கு முன்பு எனது மாமனார் தனசாமி சென்னையிலிருந்து வந்து, மின் இணைப்பு கேட்டு எனது மாமியார் குணவதி பெயரில் விண்ணப்பம் செய்திருந்தார். பின்னர் ஒருநாள் என்னிடம், தான் மின்இணைப்பு சம்பந்தமாக தேளூர் EB ஆபீசுக்கு சென்று விசாரித்ததாகவும், அங்கிருந்த கமர்சியல் அசிஸ்டெண்ட் சாமிநாதன் என்பவர் எவ்வளவு பணம் கட்டணும் என்று கணக்கிட்டு சொல்வதாகவும், அதன்பின்னர் ஆன்லைனில் பணம் கட்டிவிட்டு வந்து என்னை பாருங்கள் என்று சொன்னதாகவும் என்னிடம் சொன்னார். பின்னர், எனது மாமனார் வேலைக்கு போகவேண்டி இருப்பதால், என்னை EB ஆபீசுக்கு போய் அந்த வேலையை பாக்குமாறு சொல்லிவிட்டு சென்னை சென்றுவிட்டார். பிறகு நான் தேளூர் உதவி மின் பொறியாளர் அலுவலகத்திற்கு சென்று கமர்சியல் அசிஸ்டெண்ட் சாமிநாதன் சாரை பார்த்தேன். அப்போது அவர் ஒரு துண்டு சீட்டில் சர்வீசுக்கான நம்பரை எழுதிக்கொடுத்து, நீங்க போய் ஆன்லைனில் பணத்தை கட்டிடுங்க, மீட்டர் பாக்ஸ் வந்ததும் நானே கூப்பிடுவேன் என்று சொன்னார். அதன்படி நான் எனது மாமியார் குணவதி பெயரில் 19.06.2025-ம்தேதி மின் இணைப்பு எண்.200063180625466, இரசீது எண். PGCCAN755757409-ன்படி ஆன்லைனில் ரூ.5405/- கட்டினேன். பிறகு இன்று 25.06.2025ம்தேதி எனது மாமனார் எனக்கு போன் செய்து, அவரது போன் நம்பர் 9962314822-ல் இருந்து கமர்சியல் அசிஸ்டெண்ட் போன் நம்பர் 6381647980-க்கு தொடர்பு கொண்டு திரு.சாமிநாதன் அவர்களிடம் பேசிவிட்டதாகவும், என்னை நேரில் EB ஆபீஸ் போய் பார்க்குமாறும்

சொன்னார். நான், எனது தம்பி சதீஸ்குமாருடன் இன்று 25.06.2025ம்தேதி மதியம் சுமார் 02.00 மணி வாக்கில் தேளூர் EB ஆபீசுக்கு சென்று, கமர்சியல் அசிஸ்டெண்ட் சாமிநாதன் சாரை பார்த்து, மின் இணைப்பு சம்பந்தமாக கேட்டேன். அப்போது அவர், உங்க மாமனார் அடிக்கடி எனக்கு போன் பண்ணி மீட்டர் எப்பவரும்னு கேட்டுக்கிட்டே இருக்காரு, எதாவது செலவுக்கு பணம் கொடுத்தாத்தானே வேலை நடக்கும், நான் என்ன மீட்டர் பாக்ஸ்சை கையிலேயேவா வச்சிருக்கேன், நீங்க 500 ரூபாய் பணம் கொடுத்தீங்கன்ன இன்னைக்கே அரியலூர் ஆபீசுக்கு போய் மீட்டர்பாக்ஸ் எடுத்துட்டு வந்துடுவேன், பிட்பன்ன உங்க வீட்டுக்கு வரும் போது ஒரு 500 ரூபாய் கொடுத்தா போதும் என்று சொன்னார். அதற்கு நாங்கதான் ஆன்லைனில் 5405 ரூபாய் பணம் கட்டியிருக்கோமே சார், இப்ப தனியாக 1000 ரூபாய் பணம் கேக்குறீங்களே என்றேன். அதற்கு அவர், இப்போதைக்கு நீங்க எனக்கு தனியா 500 ரூபாய் பணம் கொடுத்தால் மீட்டர் பாக்ஸ் எடுத்துட்டு வந்து பிட்பன்ன சொல்லுவேன், இல்லைன்னா உங்களுக்கு மீட்டர்பாக்ஸ் வர லேட் ஆகும் என்று சொல்லிவிட்டார். லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை என்றாலும், கட்டிட வேலை நடக்கவேண்டும் என்பதற்காக வேறு வழியில்லாமல் அப்போதைக்கு சரிங்க சார், நான் பணத்த ஏற்பாடு பண்ணிக்கிட்டு வந்து பாக்குறேன்சார் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின்னர் லஞ்ச ஒழிப்புத்துறையில் புகார் கொடுக்கலாம் என்று முடிவு செய்து கமர்சியல் அசிஸ்டெண்ட் சாமிநாதன் என்பவர் என்னிடம் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.500/- ஐ எடுத்துக்கொண்டு வந்துள்ளேன். என்னிடம் மின் இணைப்பு வழங்குவதற்காக லஞ்சப்பணம் கேட்ட கமர்சியல் அசிஸ்டெண்ட் சாமிநாதன் என்பவர் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (sd.) (தமிழில் ஒப்பம் தேதி 25.06.25).

Submitted, Sir, Received this computerised complaint from the complainant on 25.06.2025 at 18.00 hrs, verified and ascertained its genuineness through sources, and registered a case on the complaint on 26.06.2025 at 07.00 hrs in Ariyalur Vigilance and Anti-Corruption Detachment Crime No.04/2025, U/s 7 of the Prevention of Corruption Act 1988 (as amended in 2018). (sd) B.Kavitha, Inspector of Police, V&AC, Ariyalur.

26.06.25

I am submitting the Original F.I.R. along with the complaint to the Hon'ble Court of the Principal District and Sessions Judge, Ariyalur and the copies of the F.I.R to all other concerned Officials.

26.06.25

Inspector of police
V&AC, Ariyalur
26.06.25